கிராமிய சேவைத் திட்டம்

கும்பகோணம் மண்டலம்
திருத்துறைப்பூண்டி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
பெருகவாழ்ந்தான் கிராமம்





கும்பகோணம் மண்டலம்
திருத்துறைப்பூண்டி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
பெருகவாழ்ந்தான் கிராமம்

Contents

1. செயல்பாட்டு அறிக்கை 3
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் 4
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் 4
4. பெருகவாழ்ந்தான் கிராமத்தின் தொடக்கவிழா 5
5. மருத்துவ முகாம் 7
6. மனநல ஆலோசனை முகாம் 7
7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் 7
8. உலகநல வேள்வி தினம் 8
9. முதல் நிலை அகத்தாய்வு 8
10. இரண்டாம் நிலை அகத்தாய்வு 8
11. மூன்றாம் நிலை அகத்தாய்வு 9
12. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி 9
13. பிரம்ம ஞானம் பயிற்சி 9
14. அனுபவ உரை -Result Inference 10
15. எதிர்காலத் திட்டங்கள்: 16
16. வாழ்த்து: 16

1. செயல்பாட்டு அறிக்கை

S.No	Description	Information		
1.	கிராமத்தின் பெயர்	பெருகவாழ்ந்தான்		
2.	கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள்	30.07.2025		
3.	கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள்	20.01.2026		
4.	கிராமிய சேவைத் திட்டம் காலம்	5 மாதங்கள்		
5.	மண்டலம்	கும்பகோணம்		
6.	அறக்கட்டளை	திருத்துறைப்பூண்டி		
7.	நிதி உதவி வழங்கியவர்	திரு. ப. அன்பழகன் கோபாலர் குடும்பத்தினர், பெருகவாழ்ந்தான்		
8.	கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை	ஆண்:140	பெண்:310	மொ:450
9.	கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள்	ஆண்:39	பெண்:274	மொ:313
10.	காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை	ஆண்:39	பெண்:274	மொ:313
11.	தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை	ஆண்:37	பெண்:270	மொ:307
12.	முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:26	பெண்:154	மொ:180
13.	இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:24	பெண்:136	மொ:160
14.	மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:24	பெண்:136	மொ:160
15.	பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:13	பெண்:101	மொ:121
16.	உடற்பயிற்சி பயின்றவர்கள் (Students below 14)	ஆண்:40	பெண்:42	மொ:82

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் **374-**வது கிராமமாக பெருகவாழ்ந்தான் கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் 30.07-2025-ஆம் தேதியிலிருந்து 20.01-2025-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்

4. பெருகவாழ்ந்தான் கிராமத்தின் தொடக்கவிழா

திரு. ப. அன்பழகன் கோபாலர் குடும்பத்தினர், பெருகவாழ்ந்தான் ஆகியோரின் நிதி உதவியுடன் கும்பகோணம் மண்டலம், திருத்துறைப்பூண்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை சார்பாக 30-07-2025ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.** மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் பெருகவாழ்ந்தான் கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.














உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி











5. மருத்துவ முகாம்

04.01.2026 அன்று பெருகவாழ்ந்தான் கிராமத்தில் Srinivasa Medical Hospital and Medical College மூலம் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் ஆண்கள்-20, பெண்கள்-413,மொத்தம்-433 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





6. மனநல ஆலோசனை முகாம்

16.12.2025 அன்று Dr. Sivaraman அவர்களால் பெருகவாழ்ந்தான் கிராமத்தில் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் ஆண்கள்-20 , பெண்கள்-100, மொத்தம்-120 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 04 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.





7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

30.09.2025 அன்று பெருகவாழ்ந்தான் கிராமத்தில் மண்டலம், அறக்கட்டளை பொறுப்பாளர்கள் மற்றும் கிராம பொருப்பாளர்களால் கிராம மக்கக்கு 210 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.





8. உலகநல வேள்வி தினம்

01.01.2026 அன்று பெருகவாழ்ந்தான் கிராமத்தில் உலகநல வேள்வி தினம் நடைபெற்றது. இதில் கிராமப் பொது மக்கள் 62 அன்பர்கள் கலந்துகொண்டு யோகா பயிற்சிகள் செய்தனர்.





9. முதல் நிலை அகத்தாய்வு





10. இரண்டாம் நிலை அகத்தாய்வு





11. மூன்றாம் நிலை அகத்தாய்வு




12. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி

பெருகவாழ்ந்தான் கிராமத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி துவக்கவங்கப்பட்டது. இலவச தையல் பயிற்சி மூலமாக OCT-25 TO DEC-25 வரை 3 மாத காலம் 26 கிராமப் பெண்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.





13. பிரம்ம ஞானம் பயிற்சி




14.அனுபவ உரை -Result Inference

S.No.	Inference
1	99% of the participants are benefitted with the exercises and leading a healthy life
2	Around 98% of the participants of the people now keep the village cleaner than before
3	Around 96% of the participants mental health calmed due to the sky yoga meditation
4	Around 96% of the participants are out of the depression compared to before joining the program
5	Around 95% of the participants are satisfied with tailoring skill developed
6	94% of the participants satisfied with their children's education and Attitude
7	Around 83% (299) of the participants have made progress in family peace
8	Due to SKY Exercises and meditation-95 participants cured of Migraine and Headache, 54 participants cured of joint pain, 54 women participants cured of Menstrual Problem (PCOD), 41 Participants cured of asthma and breathing problem, 41 participants cured of overweight and obesity, 27 participants cured of Eye Problem with respect to sight, Watering eye.
9	**100% of the participants are happy with the VSP Programme compared to only 27% before joining the program.**

Feedback Trend



வாழ்க வையகம் வாழ்க வளமுடன் திருவாழ்க திருவே துணை.



நான் திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கிராமத்தில் வசிக்கிறேன் எனது பெயர் பூங்கோதை சிவகுமார்.

மனவளக்கலையாக பயிற்சிகள் எங்கள் கிராமத்துக்கு வந்தது மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளது. எங்கள் ஊர் மக்களிடம் நல்ல மாற்றத்தைக் காணமுடிகிறது. எளியமுறை உடற்பயிற்சியின் மூலம் எங்கள் உடலும், மனமும் தெளிவு பெறும் வகையில் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

நான் தசைநார் நெகிழ்ப் பயிற்சி செய்வதன் மூலம் எனக்கு நீண்டநாள் இணை அடைந்துள்ளது. நான் மிகவும் கோபம் படுவேன் இப்போது தியானப் பயிற்சியின் மூலம் கோபம் குறைந்துள்ளது. பிரம்மமுகூர்த்தப் பயிற்சிக்கு ஆதியோகி அழைத்து சென்றார்கள் அங்கு அனைத்து ஆசிரியர்களும் நான் எப்படி இந்த நிலையை அடைய வேண்டும் என்பதை தெரிந்து கொண்டோம் அன்பால் மட்டுமே இறைவனை அடையமுடியும் என்று புரிந்து கொண்டேன் மிகவும் அமைதியான தூய்மையான ஊர் அங்கு இருந்த நாட்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும் மறக்க முடியாதவாக அமைந்தது. அகத்தாய்வுப் பயிற்சிகளின் மூலம் வினைப் பதிவுகள் களையப்பட்டு பதிவுகின்றன கொண்டேன் எனது வாழ்கையில் திருப்தியும் நல்ல வழி பிறந்தது. நமது வாழ்க்கை சிக்கல்களை புரிந்து கொண்டு சிக்கல்களை தீர்க்க முடிகிறது. காயகல்பப் பயிற்சியின் மூலம் உடல்நலம் பாதுகாக்கப்பட்டு ஆரோக்கியமாக மனசுத்தமும், ஆழ்ந்த அமைதியும், மன நிறைவு, சுயப்புத்தகண்மை, பொன்றவை தியானப் பயிற்சியின் மூலம் கிடைக்கிறது. இந்த உயர் பயிற்சிகள் செய்வதால் நோய் உடலும் மனதும் இணைந்து பெறுகிறது. மகராசனம் செய்வதன்மூலம் முதுகெலும்பிலிருந்த வலி குறைந்துள்ளது. உடல் சோர்வு நீங்கி உடலில் புத்துணர்ச்சி கிடைத்துள்ளது. மனித நேயம் மலர்ந்து எல்லோரோடும் இணக்கமாக வாழ வைத்த இந்த பயிற்சிக்கும் எங்கள் ஆசிரியருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன். வாழ்வில் வெற்றி பெற அமைதியும் மனதூய்மையும், அன்பும் முக்கியம் என்று அறிந்து கொண்டேன்.

"அதன்ன அருள்நாதனை அவர்கள் அருளிய வேதாத்திரியத்தை வாழ்த்தி வணங்கும்"

வாழ்க வளமுடன்

நன்றி.

S. பூங்கோதை

M. பாலசரஸ்வதி
நோய் தீர்வு திட்டம்
பெருவை.

2

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



நான் பெருகவளர்ந்தான் நோயத்தில் பதிக்க
எங்கள் ஊரில் நோய தீர்வு திட்டத்தின் மூலம் யோகா
பயற்சி பள்ளி வந்தது. அதில் சேர்ந்து தியானம், உடற் பயற்சி
கற்று தொண்டன் ஆரையார் அன்று மாற்றம் ஒன்றை பெற்றேன்.
அதில் மூச்சு பயற்சி, சிவாலபதி, பயற்சி தொடர்ந்து வேண்
டுக்கொண்டப்பு, அவரது மாற்றம் சிறியதாக. மேலும்
எனக்கு மாதவிடாய் ஏற்படும் போது. 15- ஆண்டுகளாக
பிரிந்த உயர்ந்த வரையில் அவதிப்பட்டேன் வலர்ந்த வலியால்
கோபமாக என் மாதவிலக்கு மாதந்தோறும் வருவதை,
என்று பயமாக இருந்தது. எத்தனையோ மருந்துகள்
தொடர்ந்து பயனில்லை. நான் தியானப்பயற்சி
தொடர்ந்தோறும் தொடர்ந்து வந்தேன் தியானப்பயற்சி
தொடர்ந்து, தொடர்ந்து, மாற்றங்கள் ஏற்பட்டன.
எனக்கு 90%. வலிகுறைந்ததை நான் உணர்ந்தேன்
தியானப்பயற்சி தொடர்ந்து செய்வதற்கு முன் வலி நாங்களால்
அதிகமாக இருந்தேன். வலிதாங்க முடியாமல் என்னால்
வீட்டு வேலைகூட செய்ய முடியாது. இப்போது
90% வலிகுறைந்துள்ளது. இந்த அதிசய தியானப்பயற்சி
பயற்சி தொடர்ந்து தொடர்ந்தால் மூலமாக
நடந்தது.

என்னைபோல் மன வளைமைக்க தியானமும் உடல்வள
-மைக்க உடற்பயற்சியும் செய்து நோயில்லா வாழ்வு
வாழ வேண்டும் வாழ்க வளமுடன்

by

M. Balasaraswathi Mayilvahanan.



S. ரஞ்சிதா
கிராமிய செவைத் திட்டம்
பெருகவாழ்ந்தான்.

நான் கிராமிய சேவைத் திட்டத்தின் கீழ் யோகாவில் சேர்ந்து உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்தபின் உண்மையாக, உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்த பாதி என்னுள் நிறைய மாற்றங்கள் வந்ததை நான் உணர்ந்தேன். முக்கியமாக மகராசனம், அசைய, செய்ய, Periods Problem குறைந்தது. அதாவது அந்த நேரத்தில் வயிற்று வலி கடுமையாக இருக்கும், இப்போது வயிற்று வலி என்பது கிளை என்றதன் சுவாலை வேண்டும். அடுத்ததாக தினசரி காயகல்பம் செய்து பிறகு Motion Problem குறைந்து, உடலும் மனமும் புத்துணர்ச்சியாக இருப்பதை உணர்கிறேன். எனக்கு பாதத்தவையில் கலி குறைந்து, பாதத்தவையைய அனைவ சிகிச்சை மூலம் அகற்றி சரட்டி வருடமாகிறது. அதன் பிறகு தெரிமானக் கோளாறால் அவதிப்பட்டு வந்தேன் உடற்பயிற்சியுடன், வஜ்ராசனம் போதும் வாழ்க்கை தெரிமானச் சோளாறு சீராகி, இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் நினைய கோவப்படுவன் தவம் செய்த பாதி என்னுள் கோபம் குறைந்து மன அமைதியை உணர்கிறேன். இந்த அற்புதமான வாய்ப்பை ஏற்படுத்தி தந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு.
S. P.L.H.



பெயர் - M. சங்கீதா
- கிராமிய சேவைத்திட்டம்
- பெருகவாழ்ந்தான்

என்னுடைய பெயர் M. சங்கீதா. நான் 5 மாதம் நடைபெற்ற யோக பயிற்சியில் கலந்து கொண்டேன். இந்த பயிற்சிக்கு மிகவும் பயமுள்ளதாக இருந்தது. இந்த யோக கற்பதற்கு முன் உடல் ரீதியான பல பிரச்சனைகள் இருந்தது. பயிற்சிக்கு பின் எனக்கு தலைவலி, முதுகுவலி, கில்லை. எனக்கு கருப்பை அகற்றிய பின் என்னுடைய உடல் அதிக எடையுடன் காணப்பட்டது, இந்த உடற்பயிற்சி செய்ய செய்ய எடை 4 கிலோ குறைந்து உள்ளது. என்னுடைய உடலும் மனமும் சுறுசுறுப்பாக இருக்கிறது. தியானம் செய்யும் மனம் அமைதி பெறுகிறது. 3 ஆசாத்தாம்வின் மூலம் நான் தெரிந்து கொண்டது தேவையில்லாமல், கவலை படவோ, கோபம் கொள்ளவோ கூடாது. அதிக ஆசை படக்கூடாது என்றும் கற்றுக்கொண்டேன். அகத்தாய்வின் மூலம் நம் முன்னோர்கள் செய்த கர்மவினை தான் நாம் அனுபவிக்கிறோம், நம் குழந்தைகள் நன்றாக வாழவேண்டும் என்றால் நாம் யாருக்கும் தீங்கு செய்ய கூடாது. ஆசியார் பிரம்மஞான பயிற்சிக்கு சென்று வந்தேன். அங்கு அன்மீகம் அறிவியல் அனைத்தும் கற்று கொடுத்தார்கள். ஆசியார் மணிமண்டபத்தில் மகரிஷி அவர்களின் திரலில் ஏன்பதுமைய தவம் செய்யும் பொழுது என்னுடைய மனம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மணிமண்டபத்தில் தியானம் செய்து நான் வீட்டிற்கு வருவதற்கு முன்பாக இரண்டு நல்ல செய்தி வந்தது. நான் இந்த பயிற்சிக்கு வருவதற்கு முன் என் பையன் M. ராஜ்குமார் interview Select ஆகவில்லை. நான் இந்த மனவளக்கலை யோகாவில் கலந்து 3 மாதம் கழித்து அதே கம்பேனியில் interview-வில் Select ஆகிவிட்டான். எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நான் தியானம் செய்ய செய்ய என்னுடைய குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கிறது. நான் வெளியில் செல்லும் பொழுது அருட்காப்பு சொல்லிக் கொண்டு - நான் செல்வேன். மனவளக்கலை மூலம் நான் கற்றுக் கொண்டது நாம் யாருக்கும் தீமை செய்யக்கூடாது. யாருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது. இந்த பயிற்சியின் மூலம் நான் தேவை இல்லாத கவலை படுவதை நிறுத்தி விட்டேன். அதனால் உடல் ஆரோக்கியமாக உள்ளது. எனக்கு பயிற்சி கொடுத்த Yoga Sir - Govinda Rajan Madam - Buvaneshwari

வாழ்க வையகம்!!! வாழ்க வளமுடன்!!!



ம. சதிகலா

கிராமிய சேவைத் திட்டம்
டிசம்பர் வாழ்ந்தோன்

எனது பெயர் சதிகலா மதியழகன் நான் ஜந்தி முதலாக மனவளக்கலை யோகா எளியமுறை உடற்பயிற்சிகள், தியானம் பயிற்சிகள், அகத்தாய்வுப் பயிற்சிகள் மற்றும் காயகல்பப் பயிற்சிகளுக்கான விளக்கங்களையும் கற்றிக் கொண்டேன். இதற்கு முன்பு கால் வலி முதுகு வலியால் மிகவும் கஷ்டப்பட்டேன். மனவளக்கலை யோகா பயிற்சியில் கலந்துக் கொண்டப் பிறகு உடல் ஆரோக்கியமாக உள்ளேன். அகத்தாய்வு முறையில் நல்ல கருத்துகளையும் நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதனையும் தெளிவாக தெரிந்துக் கொண்டேன். ஆழியார் திருக்கோவிலில் நல்ல அறிவுரைகளை கற்றுக்கொண்டேன். மூன்று நாள் தவம் புரிந்தது மனதிற்கு அமைதியை தந்தது. எங்கள் ஊருக்கு கிராமிய சேவைத் திட்டத்தை கொண்டுவந்த திரு. அ. இளங்கோவன் ஐயா அவர்களுக்கும், இந்த மனவளக்கலை யோகா வகுப்பை சிறந்த முறையில் தெளிவாக பயிற்சியளித்த திரு. கோவிந்தராஜன் ஐயா திருமதி புவனேஸ்வரி அம்மா அவர்களுக்கும், ஆழியார் திருக்கோவியங்களும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- இப்படிக்கி
ம. சதிகலா

15. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க பெருகவாழ்ந்தான் கிராமம், திருத்துறைப்பூண்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

16. வாழ்த்து:

பெருகவாழ்ந்தான் கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி திரு. ப. அன்பழகன் கோபாலர் குடும்பத்தினர், பெருகவாழ்ந்தான் -க்கும் இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த கும்பகோணம் மண்டல பொறுப்பாளர்களுக்கும், திருத்துறைப்பூண்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் *Asst.Prof.T.Govindarajan & Asst.Prof.G.Bhuvaneswari* அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய *VSP* நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை
உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.
உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே
உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.

-வேதாத்திரி மகரிஷி

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
WCSC-VSP இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்